[1974 சனவரி 28

Meeting of Zonal Council on Sales-Tax and Excise Duties

* 201 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any meeting of the South Zonal Council on Sales-Tax and Excise Duty was held in Madras city during May, 1973;

(*b*) if so, the details thereof; and

(*c*) the views of the Government expressed at this meeting.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இந்த சவுத் சோனல் கவுன்சிலில் தமிழ் நாடு அரசின் சிபாரிசுகள் எவையெவை அங்கீகரிக்கப் பட்டன? குழு நிறைவேற்றிய தீர்மானங்கள் யாவை? அமுல் நடத்தப் பட்டிருக்கும் தீர்மானங்கள் எவை என்பனவற்றைக் கூறமுடியுமா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: எந்தெந்த சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன, புறக்கணிக்கப்பட்டன என்ற விவரங் கள் மத்திய அரசிடமிருந்து வரவில்லை. தற்போது கொடுக்கப்பட்ட விவரங் களைத் தவிர வேறு விவரங்கள் அரசாங்கத்திடம் இப்போது இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்த விற்பனை வரிக் குழு பரிந்துரைகளின் அமுல் சரிவர நடைபெற்று வருகிறதா? மாநில ஆய்வுக் குழு ஏற்படுத்த வேண்டுமென்ற சிபாரிசை ஏற்றுக்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, நமது அரசாங்கத்தின் சார்பில் தரப் பட்ட சிபாரிசுகள் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பன போன்ற விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை.

இராமநாதபுரம் மாவட்ட தியாகிகளுக்கு வழங்கப்பட்ட நிலம்

* 202 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

இராமநாதபுரம் மாவட்டத்தில், தியாகி மானிய நிலங்கள் எத்தனை பேருக்கு எவ்வளவு வழங்கப்பட்டு இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இராமநாதபுரம் மாவட்டத்தில் 120 தியாகிகளுக்கு ஆக மொத்தம் 591·83 ஏக்கரா நிலம் வழங்கப்பட்டது.

(* 384-392-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.)

திரு. த. சோனையா : தலைவரவர்களே, தியாகிகளுக்காக நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் பெற்றுக்கொண்ட தியாகிகள் அந்த நிலத்தைக் குறைந்த விலையில் விற்றுவிடுகிறார்கள். ஆகவே, தியாகிகளுக்காகக் கொடுக்கப்பட்ட நிலத்தை அவர்களுடைய ஆயுள்பரியந்தம் விற்கக்கூடாது என்று தமிழக அரசு உத்தரவிட்டு, இதற்கு முன்பு விற்றிருந்தால் அப்படி வாங்கியது செல்லாது என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தியாகிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலம், நிலமற்றவர்களுக்கு என்ற முறையில் கொடுக்கப்படுகிறது. சில விதிமுறைகளை அனுசரித்துத்தான் கொடுக்கப்படுகிறது. சில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளை மீறினால் அரசு நடவடிக்கை எடுத்து மீண்டும் கைப்பற்றுவதற்கு அதிகாரம் உண்டு. ஆனால் நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்கள் செயல்பட்டிருந்தால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

கிராமங்களில் பொதுக் களங்கள்

* 203 வினா திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உணவு தானியங்கள், வைக்கோல் முதலியவைகளைக் காயப் போட கிராமங்களில் பொதுக்களம் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) and (இ) : கிராமங்களில் பொதுக்களம் அமைக்கும் திட்டம் அங்கீகரிக்கப்பட்டோ அல்லது பரிசீலனையிலோ கிடையாது. ஆனால் ஊராட்சி ஒன்றியக் குழு தீர்மானம் நிறைவேற்றினால் விவசாய மாணியத்தை உபயோகித்து ஒரு பொதுக்களம் கட்ட ஊராட்சி ஒன்றியங்களை அரசு அனுமதித்துள்ளது. மேலும் ஊராட்சிகள் ஆங்காங்கே இருக்கும் சட்ட உரிமையுடைய அல்லது ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைக் கிராமத்தில் பொதுக்களம் கட்டத் தேவையானால் அனுமதிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக பொதுக் களம் எங்கேயாவது கட்டப்பட்டிருக்கிறதா ? லால்குடி பகுதியில் பொதுக்களம் இல்லாமல் மக்கள் சிரமப்படுகிறார்கள். அதை அனுசரித்து அந்தப் பகுதியில் களம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?